Dinamani

தினமணி

23-05-2011

Page # 4

# 7 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை கோரி எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி விண்ணப்பம்

**சென்னை, மே 22:** அறிவுசார் சொத்துரிமை சட்டத்தின்கீழ் 7 புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை கேட்டு எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி விண்ணப்பித்துள்ளது.

2008 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் இக்கல்லூரியின் ஆராய்ச்சித் துறை தலைவர் பி. ராமசாமியின் தலைமையில் மின்னணு மற்றும் தொடர்பியல் (இ.சி.இ.), இயற்பியல் ஆகிய துறைகளின் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளனர்.

ஆராய்ச்சித்திட்டங்களுக்காக நிதி வழங்கும் இந்திய அமைப்புகள் இக்கல்லூரிக்கு மட்டும் இதுவரை ரூ. 4.8 கோடி வழங்கியுள்ளன.

ஆராய்ச்சித் துறை தொடங்கப்பட்ட 4 ஆண்டுகளில் சுமார் 25 திட்டப் பணிகள் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை 162 ஆய்வுக் கட்டுரைகளைப் பதிப்பித்து எஸ்.எஸ்.என். கல்லூரி சாதனை படைத்துள்ளது.